சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : 04

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி : சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்கள் வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் : மனித, விலங்கு உருவங்களை இரேகைகளால் வரைவார்.**

**செயற்பாடு : 'கிராமிய சூழலுக்குரிய மனித மற்றும் விலங்குருவங்களை இரேகைகளால் கற்றறிவோம்'**

**ஒப்படை : பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. இணையத்தளம், ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி போன்ற கட்புல ஊடகங்களை பயன்படுத்தி கிராமிய சூழல் பற்றியதான காணொலி (வீடியோ) ஒன்றை பார்வையிடவும்.

02. அச்சூழலில் காணப்படும் மனித நடவடிக்கைகள், விலங்குச் செயற்பாடுகள், போன்றவற்றை நன்கு அவதானியுங்கள்.

03. அதனடிப்படையில் சூழல் தன்மைகள், ஆடை அணிகலன்கள், நிறங்கள் சம்பந்தமான குறிப்பெடுத்து வைத்து கொள்ளுங்கள்.

04. நீங்கள் முன்னைய செயற்பாட்டின் போது அவதானித்தவற்றை கொண்டு மனித, விலங்குருவங்கள் சிலவற்றை பொருத்தமான முறையில் வரைந்துக்கொள்ளுங்கள்.

05. மீண்டும் அக் காணொலியினை (வீடியோ) பார்வையிட்டு நீங்கள் வரைந்த மனித மற்றும் விலங்குருவங்களில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்துக்கொள்க. அதன் பின்னர் அவ்வுருவங்களுக்கு ஒளிநிழல் படுத்தி பென்சிலால் வர்ணம் தீட்டுக.